ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

பிராமணஜாதியிற்பிறந்து பிராமணனென்ற பெயரையும் வைத்துக்கொண்டு சாஸ்திரங்களையும் ஸ்மிருதிகளையும் பொய்யென்று எவராலும் சொல்லிவிடமுடியாது. அத்தகைய சாஸ்திரங்களிடம் தங்களுக்கு நம்பிக்கையிருக்கிறதென்று சொல்லியும் எழுதியுமிருப்பவர்கள்கூட சாஸ்திரவிரோதமாய்ப் பேசுவதைக் கேழ்க்கும்பொழுது 'மம மாயா துரத்தியயா' என்று பகவான் கூறியபடி அவரது மாயாசக்தி யாராலும் அதிக்கிரமிக்க முடியாதென்பது நன்றாயனுபவத்திற்கு வருகிறது. சாஸ்திரத்திற் கூறியவாறு தர்மங்களையனுஷ்டிக்கவேண்டுமென்று சாஸ்திரக்ஞர் கூறினால் இப்பொழுது ஜனங்கள் சாஸ்திரோக்தமாய் நடக்கிறார்களா? வயிற்றுப்பிழைப்புக்காக என்னென்ன அகாரியங்களை ஜனங்கள் செய்யவில்லை. அவைகளையெல்லாம் சீர்படுத்திக்கொண்டுவரமுடியாமல் பாலிகாவிவாகம் ஒன்றை மட்டிலும் கெட்டியாக வைதிகர்கள் பிடித்துக்கொண்டிருக்கிறார்களே என்று சிலர் வருந்துகின்றனர். இது கையிலுள்ள பணத்தில் முக்கால் பாகத்தைக் கெட்டுப்போக்கினவன் பாக்கிபணத்தை ஏன் பெட்டியில் வைத்து ஜாக்கிரதை செய்யவேண்டுமென்று கூறுவதுபோலிருக்கிறது. பிராமணர்கள் ரங்கூன் முதலியவிடங்களுக்குப்போகவில்லையா? சோற்றுக்கடை வைக்கவில்லையா? வைத்தியத்தொழிலைக்கைப்பற்றி பிணத்தை அறுக்கவில்லையா? என்று கேட்கிறார்கள். இதற்காக பிரௌடாவிவாகம் விதவாவிவாகம்முதலிய சாஸ்திரவிருத்தமான காரியங்களைச்செய்துவிட்டால் அந்த தோஷங்கள் விலகிவிடுமாவென்று அவர்களைக் கேட்கவேண்டும். சிலபேர்கள் தீயத்தொழிலைக் கைப்பற்றிவிட்டால் எல்லோருமே அப்படியாய்விட்டதாகக் கூறமுடியுமா? பாராசரஸ்மிருதியில் 'காலதோஷத்தால் துவிஜர்கள் வெவ்வேறு தர்மங்களையாசிரயித்துவிட்டாலும் அதற்காக அவர்களை நிந்தைசெய்யக்கூடாது' என்று கூறப்படவில்லையா? வேதத்தையும் வைதிகர்களையும் தூஷிப்பது பாபத்திலும் பாபமென்று போதிக்கப்படவில்லையா? இவைகளையறிந்தவர்களும் ஏதோ ஒரு காரணத்தால் தூஷிப்பதுபோலவேதான் சிலர் விபரீதகாரியங்களையாசிரயித்துவிடுகின்றனர் அதை யார் தடுக்கமுடியும்? வைதிகர்கள் அசட்டுத்தனமாக சிலவைகளில் பிடிவாதம்செய்வது சரியில்லை, இவர்கள் என்ன சொன்னபோதிலும் விவாகமசோதா -சட்டமாய்விடப்போகிறது. அப்பொழுது இவர்கள் தங்கள் கர்மபலனையனுபவிக்கவேண்டி வருமென்று சிலர் கூறுகின்றனர். அஸுரர், ராக்ஷஸர் முதலாயினோர் வைதிகதர்மத்தை எவ்வளவோ கெடுத்தும் அது தலையை நீட்டிக்கொண்டே நாளதுவரை வந்திருப்பதுபோலவே தற்காலத்திலும் எவ்வளவுபேர்கள்கூடி எவ்வளவு சட்டம்செய்தபோதிலும் வைதிகதர்மம் அழியாது. தர்மஸேதுவான பகவான் இருக்கிறார், "ஸம்பவாமி யுகேயுகே" என்று அபயவாக்களித்திருக்கிறார். அவர் இப்பொழுது உறங்கிவிடவில்லை. தர்மரக்ஷணத்தில் ஜாகரூகமாகவேயிருக்கிறாரென்று அவரது வாக்கைக்கொண்டே அறிந்துகொண்ட வைதிகர்கள் எதுவந்தாலும் வரட்டுமென்றே இருக்கிறார்கள். அவர்கள் விஷயத்தில் பகவானே அருள்புரிவாராக. சுபம்.

பத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.
சுக்ல-௵ ஆவணி-௴ ௨௮௳

# ஸ்மிருதிகள்.

வேதம் அனந்தமாயிருப்பினும் கற்பவர்களின் ஸௌகரியத்திற்காக சாகைகளாகப் பிரிக்கப்பட்டனவென்று முன் கூறப்பட்டது. அவை கர்மகாண்டமென்றும், உபாஸனாகாண்டமென்றும், ஞானகாண்டமென்றும், மூவகைப்படும். அவைகள் அநாதியே. அவைகளைக்கற்றுணர்ந்து தெளிந்த மனு முதலிய பெரியோர் வேதத்திலுள்ள விதிவிலக்குகளின் உண்மையைத் தெளிந்தெடுத்து, உலகவாழ்க்கையிலுள்ள அதிகாரிகளுக்காக ஸ்மிருதிகள் என வழங்கும் தர்மநூல்களை இயற்றினர். வேதங்களெல்லாவற்றையும் கேட்டவர் அவற்றை நினைத்து எழுதியதுகொண்டு "ஸ்மிருதி" என்னும் பதத்தால் தர்மசாஸ்திரம் சொல்லப்படுகின்றது. இந்த தர்மநூல்கள் அவ்வவ்வர்ணத்தவர்களுக்குரிய தர்மபேதங்களை அதிகாரிகளுக்குத் தக்கவாறு போதிக்கின்றன. ஆகவே ஸ்மிருதிகள் தர்மங்களையனுஷ்டிக்கும் ஒவ்வொருவருக்கும் அந்த தர்மமூலமாக சித்தத்தைச்சுத்திசெய்து பேரானந்தமடைய நல்வழிகாட்டும் கருவியாய் நின்றுள்ளன. அவ்வண்ணமே உலக நடை நிறைவேறவேண்டி தாயம், தானம் தண்டம் முதலிய பற்பலவிஷயங்களையும் போதிக்கின்றன. அஸத்தான கர்மங்களுக்குக் கடுமையான பிராயச்சித்தங்களைக்காட்டி அவற்றில் மனம் செல்லவொட்டாது மறுக்கின்றன. ஆதலினால் இந்த ஸ்மிருதிகளின் வகுப்புகள் ஆசாரம், வியவஹாரம், பிராயச்சித்தம் என மூன்று. இம்மூவகுப்புகளுடன் இந்த ஸ்மிருதிகள் இப்பாரதகண்டத்தில் நீடூழிநிலைபெற்று நமது தேசத்திற்கும் பாஷைக்கும் ஓர் அலங்காரமாய் நின்றுள்ளன. அவைகளில் காலத்திற்கேற்றபடியெல்லாம் தர்மங்கள் முற்றிலும் !சொல்லப்பட்டுப் போயின. ஆதல்பற்றி

அவைகளை மாற்றுவது கூடாது. ஏனெனில் இத்தேசத்திலுள்ள எல்லாவித ஆஸ்திக வைதிகர்களும் ஒவ்வொரு கல்பங்களில் அவதரித்து வித்யாதிகார தர்மாதிகார புருஷர்களாகி ஒரேமாதிரி சொல்லுகின்றனர். அங்ஙனமே பாராசார்-

**तथैव धर्मान् स्मरति मनुः कल्पान्तरेन्तरे ।**

"அங்ஙனமே மனு ஒவ்வொரு கல்பங்களிலும் சொல்லுகின்றார்" என்று மொழிந்தனர். அந்தப் பிரமாணங்களைப் பார்க்குமிடத்து காலம் வேறுபடினும் அவற்றுள் சிலவற்றைச் சேர்க்கவாவது, குறைக்கவாவது கூடாது என்பது நன்கு விளங்கும். வேதங்கள் நான்கையும் நன்கு ஓதி அவற்றின் பொருளை நன்றாக ஆராய்ந்து ஒவ்வொரு தர்மங்களைத் தானும் செய்து முற்காலத்துதித்த முனிவர்களுக்கொப்பானவராயினும், இக்காலத்தியவர் ஒன்றுகூடி மாற்ற முயன்றாலும், அந்த முயற்சி பயன்படாதெனக் கருத்து. இது இவ்விதமிருக்க சிலர் அந்த ஸ்மிருதிகளிலுள்ள தர்மங்களை நன்கு விளக்கும் வேதம் முதலியவற்றை அறியாது சிற்சில காவ்யங்களைப் படித்து கீர்வாணபாஷையின் வாஸனையற்ற கூட்டங்களில் ஸர்வக்ஞர்களாய் அபினயித்து அந்த தர்மநூல்களை சிலவற்றை மாற்றவும், சிலவற்றை நீக்கவும், சிலவற்றைச் சேர்க்கவும் முயலுகின்றனர். நமது முன்னோர்களியற்றிய நூல்களே தத்துவ ஆராய்ச்சி நிரம்பியனவென உரைத்து எவ்விதத்திலும் அந்த தர்மநூல்களையே முன்னுக்குக்கொண்டுவரமுயலும் பெரியோரை அவமதித்து அவர் கூறுவதற்குத் தடைசொல்லி தற்கால நாகரீகமொன்றையே பெரிதாகப் பாராட்டுகின்றனர். நமக்கும் நமது ஜாதி, மதம் முதலியவற்றிற்கும் இப்படியானால் கெடுதி மிக நேரிடுமென்று வைதிகர்கள் கூறினால் "மதம் போய்விட்டது! சாஸ்திரம் போய்விட்டது! நாஸ்திகம் வளர்ந்துவிட்டது" என்பதாதி அசட்டுத்தனமாய்க் கூச்சலிடுகிறார்களே என்று வருத்தப்படுகிறார்கள். கலிகாலத்தில் தர்மம் குன்றியதே என்றால் அதற்காக அதர்மமும் தர்மசாஸ்திரங்களுக்கு ஒத்தது என்று சொல்வது மிகக்கொடியதல்லவா! அப்பாவத்தொழில்களைச் செய்யும் பலரிடமும் அவர் செய்வதற்குத் தக்க வேறு காரணங்களிருப்பினும் உலகநடையறிந்தவர் அதுவிஷயத்தில் சிறிதேனும் கருணை செய்யார். உலகத்திலொருவன் தனதுஎழ்மையினால் பிறர்பொருளைக்கைக்கொண்

டால் அவனை அரசாங்கத்தார் விடுவாரோ? ஆகவே "நாம் நம்மா லியன்றமட்டில் சுருதிகளையும், ஸ்மிருதிகளையும், வரைகெடாது காக்கவேண்டியதுமன்றி அவற்றை முற்றிலும் விடாது அனுஷ்டானத்தில் கொண்டுவரக்கூடிய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டியதவசியம்தான். அது பயன்படாவிடில்நாமென்னசெய்யலாம்,

प्रकृतिं यान्ति भूतानि निग्रहः किं करिष्यति ।

"பிராணிகள் அவரவர்களது பிராசீன வாஸனைக்குத் தக்கபடி நடக்கிறார்கள். அதில் நம்முடைய நிக்கிரஹம் என்ன செய்யப் போகிறது" என்று பகவானே கூறுகின்றார். ஆனால் ஒன்றிரண்டு ஆசாரத்தவறுதலாய் நடக்கிறதே என்று எல்லாவற்றையும் தவா விட்டுவிடக் கூடாது. நம்மவர்களுக்கு ஆசாரம் கெட்டுவிட்டால் மற்ற எவ்விதமான ஸம்ஸ்காரமும் பயன்படாது. அதுகொண்டே 'ஆசாரத்தையும்விட்டு வேதங்களனைத்தையும் கற்றாலும் அவனிடம் அவை பயன்படா' என்று வேதங்களில்கூறப்படுகின்றது. தர்மமென்பது

विद्वद्भिस्सेवितस्सद्भिर्नित्यमद्वेषरागिभिः ।
हृदयेनाभ्यनुज्ञातः यस्तं धर्मं व्यवस्यत ॥

"பொறாமையற்று விருப்பம் நீக்கி, வித்தையில் உழைத்த
பெரியோர் தன் மனதார ஒப்பியதே தர்மமென்றறிக"

என்ற மனுவசனத்தால் கூறப்பட்டுள்ளதே. இம்மனுவசனத்தில் கண்ட வித்தையென்னும் சொல் இந்த ஸ்மிருதிகளின் மூலமான வேதவித்தையே ஒழிய மற்றொன்றல்ல. ஸ்மிருதிகளின் உண்மையை அறியத்தெரிந்து கொள்ளவேண்டியது வேதமேயாதலால் ஸ்மிருதிகளுக்கு வேதங்களே மூலம் என்பதில் சிறிதேனும் ஸம்சயமில்லை. அதுகொண்டே சங்கரர் "ஸ்மிருதிகள் வேதத்தை மூலமாய்க்கொண்டன" என்றார். மனு முதலியவர்களும் இந்த அபிப்பிராயத்தையே வெளியிட்டிருக்கின்றனர்.

"மனு எடுத்துரைத்தது மருந்து" என்று வேதத்தில் காணப்படுவதால் மனுவும் பாராசர் முதலியவர்களும் வித்தையையும், தர்மத்தையும், போதிக்க அதிகாரிகர்களென்று கொள்ள வேண்டும். "அத்தகைய தர்மாதிகாரிகள் மூவரோ, நால்வரோ, எதைச் சொல்வாரோ அதுவே தர்மம். மற்றவர் ஆயிரம் போயினும் அவர் சொல்வது பயன்படாது, என்று

चत्वारोपि त्रयोवापि यं ब्रूयुर्वेदपारगाः ।
स धर्मइति विज्ञेयः नेतरैस्तु सहस्रशः ॥

என்பதாதி வசனங்களால் ஸித்திக்கின்றது. ஆதலால் வைதிகர்களல்லாத பெருங்கூட்டத்தாரும் இவைகளைமாற்ற வல்லமையற்றவரெனத் தெரிகிறது. ஆகவே பிரகிருத பாலிகாவிவாஹமான விஷயத்தில் தார்மிகர்களான வைதிகபிராம்மணர்களுக்குஅதிகாரம் இல்லையென மற்றவர் கூறுவது விந்தையினும் விந்தை. ஆகையால் இது விஷயத்தில் மற்றவர் எவ்வளவு உரைத்தபோதிலும் அவைகளை தார்மிகர்கள் அங்கீகரிக்காமல் வைதிகர்கூறியவழியே நாடி நன்மையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

# சோழமன்னர்களின் சரித்திரம்.

(சகூகூ-வது பக்கத்தொடர்ச்சி)

தன் சரீரத்திலிருந்த குஷ்டம் நொடிப்பொழுதில் தொலைந்த ஆச்சர்யத்தைக்கண்ணுற்றஅரசன் புவியிற்றண்டம்போல்விழுந்து வணங்கிப் பிருஹதீசரைத் துதிக்கலானான்.

கரிகாலன்:— ஹே தேவதேவரே! அம்பிலி ஆடியவரும் நன்மை பயப்பவரும், பெரியநாயகியின் பதியுமான பிருஹதீசரே! அழிவற்றோரும் வ்யோமகேசரும், சூலமேந்தியவரும், வாமதேவரும் பீமருமான பிருஹதீசரே! மஹாதேவரும் நிர்மலரும் சங்கரரும் சடைதாங்கியோரும் வணங்கினோரின் அக்ஞானத்தை நீக்குவோருமான பிருஹதீசரே! கங்கைதாங்கியவரும் உலகேயுருவாக அமைந்தவரும் பாபங்களைப் போக்குவோரும் ஆலவமாலை அணிந்தவரும் பசுபதியுமான பிருஹதீசரே! திருநீருருத்திராக்ஷங்கள் பூண்டவரும் சர்வரும் முருகனின் தந்தையும் கணேசர் நந்தி இவர்களாற் றொழப்பட்டவருமான பிருஹதீசரே! விருஷபக்கொடியுடையவரும் சர்வரும் பிரமனின் முண்டத்தை அணிந்தவரும் கபாலமாலை தரித்தவருமான பிருஹதீசரே! மஹாமேருவை வில்லாகக்கொண்டவரும் திருமாலையம்பாக

உடையவரும் பெருந்தேவருமாகிய பிருஹதீசரே! முக்கண்ணுடையவரும் தேஜோரூபியும் நீலகண்டரும் ஸர்வகாரண மூர்த்தியும் ஸிருஷ்டிஸ்திதிஸம்ஹாரஞ் செய்பவருமான பிருஹதீசரே! வணங்கினோருக்கு உடனேயருளும் ருத்ரப்ரதிபாத்யருமான பிருஹதீசரே! உம்மைப் பணிந்தேன்.

இவ்வாறு பிருஹதீசரை எட்டுச்செய்யுள்களாற் புகழ்ந்து, தேவர் தேவி இருவர்களுக்குமிடையில் தண்டம்போல் வீழ்ந்து வணங்கினன். ஆசானாகிய ஹரதத்தரையும் சிவார்ச்சகர்களையும் பூஜித்தான். திருவையாற்றிலிருந்துவந்த ஆதிசைவகுலத்துதித்தவர்களுக்கு பசுக்கள் தனங்கள் தான்யங்கள் வஸ்திரங்கள் வீடுகள் முதலியவைகளையளித்து பிருஹதீசருக்குப் பூஜைசெய்துவருமாறு அவர்களை நியமித்தான். வணிகர்களுக்கும் வீடுபொருள்களளித்தான். பிருஹதீசரின் பக்தர்கள் சந்திரன் நக்ஷத்திரங்களுள்ளவரையிற் சுகமாய் வாழ்வார்களாக வெனக்கூறி அரசன் பிரதக்ஷிணநமஸ்காரங்கள் செய்து அரண்மனை சேர்ந்தான்.

அன்றிரவு மன்னவன் தன் மாளிகையில் மனையாளுடன் சந்தோஷமாகப் படுத்து நித்திரைபுரிகையில் பிருஹதீசுவரர் பிருஹன்னாயகியுடன் கனவிற்றோன்றி

त्वन्निवेदितभोज्येन जरतीदत्तछायया ।
निवसामि महाराज मान्योऽसि त्वं न संशयः ॥

'ஏ மன்னனே! நீ நிவேதனஞ்செய்யும் அன்னத்தாலும் கிழவியளித்த நிழலினாலும் இங்கு வசித்துவருகிறேன். நீ வெருமதிக்கத் தக்கவன் என்பதற்கையமில்லை' எனக்கூறி மறைந்தார்.

காலையிலெழுந்த அரசன் இந்தக் கனவுவிருத்தாந்தத்தை தன்னாசானாகிய ஹரதத்தரை அழைத்துக்கூறினான். பிறகு அவரும் மந்திரிகளைக்கூப்பிட்டு விசாரித்துச் சிற்பிகளெல்லோரையும் அழைத்துவர உத்திரவிட்டார். சிற்பிகளெல்லோரும் வரவே, நீ என்ன செய்தாய் என்பதை உண்மையாகக்கூறு எனச் சோமவர்மாவை நோக்கி, 'இவ்வாலயம் அரசன்பொருளாற் கட்டப்பட்டதா வேறொருவர்பொருளாற் கட்டப்பட்டதா என்பதைச் சிற்பிகளைத் தனித்தனியே விசாரித்து உரைப்பாயாக' என உத்திரவிட்டான்.

அவ்வாறு விசாரிக்கையில் 'சில சிற்பிகள் ஓர் கிழவியால் அன்னமளித்துப் போஷிக்கப்பட்டனர். அதனாலவள் கொடுத்த ஓர் கருங்கல் சிகரத்தில் வைத்துக்கட்டப்பட்டிருக்கிறது. அதனை அவ்விடம்விட்டெடுப்பது ஓர்விதத்திலும் இயலாது' எனச் சிற்பிகள் கூறினர்.

இதனைச் சோமவர்மன் 'ஏ சிறந்த வேந்தே! எங்களுடைய பெரியதோர் குற்றத்தைப் பொருத்தருளவேண்டும். ஓர் கிழவி கொடுத்த கல் கோபுரத்தின் சிகரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. நான் உன்னுசானுடன் ஆலோசித்துச் சிவனையர்ச்சிக்கிறேன். அவர் உங்களுக்கு உபாயம் கூறுவர்' என்றுரைத்தான்.

சிற்பியின் வார்த்தையைக்கேட்ட அரசன் ஹரதத்தருடன் ஆலோசித்து உயிரை மாய்த்துக்கொள்வதே உபாயமெனத் தீர்மானித்தான். அரசன் மூன்றுநாட்கள் உணவையுட்கொள்ளாது தன் மனையாளுடன் ஆலயத்தில் பிருஹதீசருக்கும் நந்திக்கும் இடையே வசித்துவந்தான். மூன்றுவது தினம் இரவில் உறங்குகையிற்கனவிற் பிருஹதீசர்தோன்றி உயிரை மாய்த்துக்கொள்ளத் தீர்மானங்கொண்ட கரிகாலன் என்னும் பக்தனைநோக்கிக் கூறலானர்.

பிருஹதீசர்:— ஏ சிரேஷ்டமன்னனே! உன் மனத்துக்கத்தை விட்டொழி, நீதான் சிவகைங்கர்யஞ் செய்தவன், கிழவிக்கு வேண்டிய பொருளைக்கொடு, அவள் தன் தர்மத்தைச் சந்தோஷமாயுனக்குத் தத்தஞ்செய்தால்அப்பொழுது எல்லாம் உன்னுடைய தர்மமாகும். வர்ஷதாரைகள் எவ்வளவோ, ஆகாயத்தில் நக்ஷத்திரங்களெவ்வளவோ, அவ்வளவுநாட்கள் என் முன்னிலையில் முன்பின் வம்சத்தாருடன் வசிப்பாயாக. முடிவில் என் ஸாரூப்யமடைந்து நந்திக்கொப்பாகவும் இருப்பாய். கணேசன் குஹன் இவர்களைப்போல் தேவியின் பிரியகுமாரனாக விளங்குவாய் என்பதற்கையமில்லை.

இவ்வாறு ஈசனாற் சொல்லப்பட்ட பக்திவாய்ந்த மன்னன் காலையிலெழுந்து ஹரதத்தரிடம் கனவுவிருத்தாந்தத்தைக் கூறினன், கிழவியை அழைத்துவந்து கனகாபிஷேகஞ்செய்வித்தான், அவள் கையால் தாராபூர்வகமாய்க் கொடுக்கப்பட்ட தர்மத்தை கிரஹித்துக்கொண்டு 'ஏ கிழவியே! லக்ஷம் தங்கடங்கங்களைப்

பெற்றுக்கொண்டு சந்தோஷமடைவாயாக. அதனாலெனக்கும் ஒப்பற்ற சந்தோஷமேற்படுமென்பதிற் சந்தேகமில்லையென்று அரசன் சொன்னான்.

அதுகேட்ட கிழவி 'ஏ சோழமன்னனே! இன்றைக்கோ, நாளைக்கோ இறக்குந்தருவாயிலுள்ள எனக்குப் பொருள்களால் யாது பயன்? கும்பகோணத்திற்கு நிருருதிதிசையிலுள்ள ஐராவதேச்சுரம் என்னுமாலயத்தை சிற்பிகளால் இப்பொருள்களைக் கொண்டு என்பெயரால் சீக்கிரஞ்செய்துமுடியும். இதனாலெனக் கொப்பற்ற சந்தோஷமேற்படும் எனக்கூறினாள்.

அரசனுமதனை அவ்வாறே ஏற்றுக்கொண்டு அங்குள்ள சிற்பிகளால் அக்கோயிலைக் கட்டச்செய்தான். கிழவியும் மனக்களிப்புடன் சென்றாள். பிறகு காலவளவிற் சோழமன்னவனும் கைலாஸஞ்சென்றான்.

ஸூதர்:— இக்கரிகாலன்சரித்திரம் பாவத்தைப்போக்கும். அவ்வாசன் 90-வருஷங்களாசாண்டு பீமசோழன் என்னும் தன் மகனுக்குப் பட்டஞ்சூட்டிவிட்டுக்கைலாஸஞ்சென்றான். அங்கு சிவனுடைய கணத்தலைவனாகிச் சிவஸாரூப்யமுமடைந்தான்.

எதுவரையில் நதிநதங்களும் சமுத்திரங்களும் மலைகளுமிருக்குமோ, அதுவரையில் அவ்வாசனுடைய கீர்த்தி ஸ்ரீ பிருஹதீசர் அருளால் இப்புவியில் நிலைபெறலாயிற்று.

அவனைப் புகழும் சுலோகங்களெல்லாம் அவ்வாலயத்தின் பிராகாரங்களிலெழுதப்பட்டிருக்கின்றன. கரிகாலன் ஓர் பெரிய சிவபக்தசிரோமணியான சோழன், அவன்சரித்திரத்தைக் கேட்பவர்களும் கேட்கச்செய்பவர்களும் சிவகணத்தலைவர்களாகவாகி கைலாஸத்தில் விளையாடுவார்கள். பிருஹதீசரின் சரித்திரம் மிக்கப் புண்ணியமானது, பாவங்களை நீக்கும். ஏ பிராமணோத்தமரே! இச்சரிதையைக் கேட்டாலே பிருஹதீசரின் பூர்ணாநுக்ரஹமேற்படும்.

## 18 அத்தியாயம்.

ஸூதர்:— கரிகாலன் கைலாயமடைந்ததும் மந்திரிகளும் குடிகளெல்லோரும் அவன் மகன் பீமசோழனை அந்தஸ்தானத்தில் அரசனாகச்செய்தனர், எல்லா குணங்களும் நிறையப்பெற்ற

வளும் தாமரைபோன்ற கண்ணையுடையவளுமான கேரளமன்னனின் குமாரி மன்மதனுக்கு ரதிபோல் இவனுக்கு மனைவியாகவமைந்தாள்.

பிறர் அஞ்சத்தக்க பராக்கிரமம் வாய்ந்த இப்பீமசோழனைப் பல சிற்றரசர்களும் வணங்கினர். பீமன்போன்ற பலமுடையவனும் பீமனென்னும் சங்கரனையர்ச்சிப்பதிலேயே விருப்பமுடையவனுமான அப்பீமன் வித்யுல்லதையின் விருப்பப்படியே பூமியை ஆண்டுவந்தான். அவ்வேந்தனின் இராஜ்ஜியத்தில் திருடர்களும் துஷ்டமிருகங்களும் கிடையாது, பூமிமுழுவதும் பயிர் நிறைந்திருந்தது. இந்திரன் காலத்தில் மழை பொழியச்செய்துவந்தான். அந்தணர்கள் வசதியாகவுள்ள கிராமங்களிலெல்லாம் கொடூரச்செயலுடையவன் ஒருவனேனும் இல்லாமற்செய்தான். வழிகளிற் பல விருக்ஷங்களைப்பயிரிட்டான், குளங்களை வெட்டினான், வழிப்போக்கர்களுக்கும் ஸன்யாஸிகளுக்கும் ஏராளமாக அன்னமளிக்குமாறு பல அன்னசாலைகளையும் ஏற்படுத்தினான். நாதனற்ற பாலர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பிணியாளர்களுக்கும் தொட்டில் விசிரி கண்ணாடிகள் எண்ணெய்ஸ்நானஞ்செய்வதற்கு வேண்டியவைகள் கஷாயம் முதலிய பல ஔஷதங்கள் ஆகிய இவைகளனைத்தும் கொடுத்துதவுமாறும் கால்பிடிப்பதற்கு வேலையாட்களையும் உத்திரவிட்டிருந்தான்.

दीयतां दीयतामन्नं भुज्यतां भुज्यतामिति ।
इत्याक्रोशन्ति गणकाः ग्रामे ग्रामे पुरे पथि ॥

ஒவ்வொரு கிராமங்களிலும் பட்டணங்களிலும் வழிகளில் கிராமாதிகாரிகள் (ஏ வேலையாட்களே!) சாப்பாடு போடுங்கள், சாப்பாடு போடுங்கள், (ஏ வழிப்போக்கர்களே!) சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள் எனக் கூவுகின்றனர்.

शकटारोपितैरन्तैर्दीपिकापाणयो निशि ।
न स्वप्तव्यं केनचिद्वै चातुर्वर्ण्यनरैः क्वचित् ॥
इदृशी नो नृपस्याज्ञा भोजनीया नरा निशि ।
यस्य वर्णस्य यो धर्मः स सर्वैः क्रियतामिति ॥
लापयध्वं फालतले भूतिं रुद्राक्षधारणम् ।
कुरुध्वं पूज्यतां शम्भुः भीमस्याज्ञेयमीदृशी ॥
नोचेद्वो भीमचोळस्य सद्योदण्डः पतिष्यति ।

அரசனின் வேலையாட்கள் இரவில் கையில் தீபத்தை எடுத்துக் கொண்டும் வண்டியில் அன்னத்தை ஏற்றிக்கொண்டும் ஆங்காங்கு சென்று "நான்குவர்ணத்தவர்களில் ஒருவருமுண்ணாது உறங்கக் கூடாது, இரவில் எல்லோரையும் உண்ணச்செய்யவேண்டுமென்று இவ்வாறு எங்கள் அரசன் ஆணையிட்டிருக்கின்றனன். எந்தெந்த வர்ணத்தவர்களுக்கு என்னஎன்னதர்மம் விதிக்கப்பட்டுள்ளதோ அதனை அவர்களெல்லோரும் அனுஷ்டித்துவரவேண்டுமென்றும், 'நெற்றியிற் றிருநீற்றைப் பூசிக்கொள்ளுங்கள், ருத்திராக்ஷத்தை அணிந்துகொள்ளுங்கள், சங்கரனைப் பூஜியுங்கள்' என்றிவ்வாறு பீமசோழனின் உத்திரவு. அப்படிச் செய்யாவிடில் பீமசோழனின் சிக்ஷை உங்களுக்கேற்படும்" என்று கூறிவந்தனர்.

பீமசோழன் என்னும் மன்னவனிவ்வாறு அறத்தையே மேற்கொண்டு பூமியையாண்டுவந்தான். அப்பொழுது அந்த அரசன் திருவண்ணாமலையின் கோபுரங்களையும், மண்டபங்களையும், காவேரியின் வடகரையில் பீமேசர் ஆலயத்தையும் சீகாழியில் தோணியப்பர் ஆலயத்திற்கு நான்குதிசைகளிலும் கோபுரவாசல்களையுங் கட்டுவித்தான்.

शिवालयस्य दीपार्थं चक्रे माधूककं वनम् ।

சிவாலயங்களில் விளக்கேற்றுவதற்குவேண்டி இலுப்பைத்தோப்புகளையுண்டுபண்ணினான். கார்த்திகைமாதத்தில் சிவனுடையவும் விஷ்ணுவினுடையவும் ஸன்னிதிகளில் தீபங்கள் வைத்தான்.

नारिकेलेक्षुकदलीसर्वपुष्पवनान्यपि ।
कारयामास भीमोऽसौ चोले सर्वशिवालये ॥

பீமசோழன் என்னுமரசன் எல்லாச்சிவாலயங்களிலும் தென்னை வாழை கரும்பு இவைகளின்தோட்டங்களையும் எல்லாவித புஷ்பங்களும் நிறைந்த பூந்தோட்டங்களையும் உண்டுபண்ணினான். குளங்களில் பாசிக்கொத்துக்களையெல்லாம் எடுத்து சுத்தப்படுத்தியவைகளுக்குப் படிக்கட்டுகளையுந் நிர்மாணஞ்செய்தான். சிவனுடையவும் திருமாலுடையவும் ஆலயங்களில் மஹாபூஜை மஹோத்ஸவங்களை நடத்திவந்தான். இவ்வரசன் தன்னறம்வழுவாது இராஜ்ஜியமாளுகையில் குடிகள் முந்திய சோழர்களை மனதினாலும் நினைக்கவில்லை. வித்யுல்லதை என்னும் அம்மன்னனின் மனைவியுந் தங்கணவனின் வழியையே பின்பற்றிவந்தாள். தன் தந்தை

பின் ஹரிஹுள்ள் சங்கரநாராயணனிடம் மிக்கபக்திவாய்ந்தவளாக இருந்துகொண்டு அம்மூர்த்தியைக் காணவிரும்புகிறேன் என்று ஏகாந்தமாகவிருக்கையில் கணவனை வேண்டினள்.

அன்றிரவு அவள்கனவிற்சங்கரநாராயணன் தோன்றி 'நான் லிங்கவுருவுடன் பிருஹதீசரின் வடக்கே கோங்கணேசரின் தெற்கேயிருக்கிறேன். நியமத்துடன் அங்கு லிங்கத்தைத் தரிசித்தால் என்னைக்கண்ட பயன்' உனக்கேற்படும். அங்கு பக்தி செலுத்திவருவாயானல் வாழ்நாளின் முடிவில் என்னையேயடைவாய். ராஜேந்திரசோழன் என்னும் மகன் உன்வயிற்றிலுதிக்கப் போகிறுன்' எனக்கூறி மறைந்தார்.

இவ்வாறு கனவில் ஈசன்வார்த்தையைக்கேட்ட அம்மாது சிரோமணி காலையில் அவ்விடஞ்சென்று லிங்கத்தைக்கண்டு, மிக்கவாச்சரியமுற்றுள். திவ்யமான கர்ப்பக்கிருஹத்துடன் ஓர் ஆலயத்தை அம்மூர்த்திக்கு அங்கமைத்து மஹாதேவனையர்ச்சித்து அரசனும் அரசியும் ஸ்தோத்திரஞ்செய்தனர்.

வித்யுல்லதா:— தேவதேவரே! பெருந்தேவரே! கருணைக்கடலே! நன்மைபயக்குஞ்சிவமே! எப்பொழுதும் இங்கிருந்து என்னுடைய விருப்பத்தையளித்துவாரும். பிள்ளையில்லாது உம்மை அர்ச்சிப்போர்களுக்குப் பிள்ளையை அளிப்பீராக.

இத்துதியைக்கேட்டு ஆனந்தமுற்ற மஹாதேவர் அவளை நோக்கிக் கூறலானர்.

சங்கரநாராயணன்:— என்பக்கத்திலிருக்கும் கிணற்றில் எல்லோருடைய பாவத்தையும்போக்கும்ஸ்ரீகங்காதேவி மறைந்துவசிக்கிருள். அதில் வைசாகமாதத்தில் ஸ்னனஞ்செய்வோரின் வம்சம் அழியாது செழிக்கும். ஆதலால் ஹே அரசியே! நீயும் அதனில் மூழ்கி கார்த்திகைமாதந் திங்கட்கிழமையன்று ஷோடசோபசாரங்களுடன் எனக்குப்பூஜைசெய்வாயாக. இச்சோழராஜ்யத்தையாளப்போகின்ற இராஜராஜேந்திரன் என்னும் மகனைப்பெறுவாய்.

சிவனுணைப்படி அரசகுமாரியும் அவ்வாறே அக்கிணற்றில் ஸ்னனஞ்செய்து விரதத்தையனுஷ்டித்தாள். காலவளவில் இராஜராஜேந்திரன் என்னும் மகனையும் பெற்றெடுத்தாள். பிறகு சோழமன்னன் ஸர்வலக்ஷணங்களும் பொருந்தியவனும் உருவு

டன் வந்த மதனன்போன்றவனும் ஸர்வசாஸ்திரங்களையுங்கற்றுணர்ந்தவனும் யௌவனமடைந்தவனுமான தன் மகனைக் கண்ணுற்று அவனுக்குக்குலசேகரபாண்டியனின் மகளும் இரதிபோல் அழகியவளுமானகமலினீ என்னும்பெண்ணை மணம்புரிவித்தான், அவ்வரசகுமாரன் தாய்தந்தையர்களுக்குப் பணிவிடைகள் செய்துகொண்டவர்களுடன் ஆனந்தமாய்க் காலங்கழித்துவந்தான். அவன்தந்தை 77-வயதளவும் உலகாண்டு முடிவிற் றன் மனையாளுடன் சிவபதம் நாடவே இராஜராஜேந்திரசோழன் சத்துருக்களையெல்லாம் வென்று அரசுபுரிந்துவந்தான்.

## 19 அத்தியாயம்.

பீமசோழன் சிவபதம் நாடவே அவன் மகன் இராஜராஜேந்திரன் மந்திரிகளோடும் குடிகளோடும் ஆலோசனைசெய்துகொண்டெல்லாவாசர்களையும் ஜெயித்து சிவனருளால் சேர கேரள பாண்டியமன்னர்களைக் கப்பங்கட்டிவரச்செய்தனன். அப்பொருள்களாற் சிவாலயங்களைக் கட்டுவித்தான். முல்லைவாசலென்னும் பெரிய க்ஷேத்திரம் புஷ்பவனேச்சுவரர், இக்ஷுமூலேச்சுவரர், தக்ஷிணமலகேச்சுவரர், அகஸ்தியேச்சுவரர், பிரும்மாரந்திரேச்சுவரர், இருஷிகானனநாதர், ஸுவர்ணஸ்தவனர் இவர்களாலயங்களும் தீர்த்தங்களும் அவ்வரசனலுத்தாரணஞ்செய்யப்பட்டன.

ஸூதர்:— அவ்வேந்தன் எண்பது சிவலிங்கங்களைப் பிரதிஷ்டைசெய்து உற்சவம் நடத்திவந்தான். ஒவ்வொரு க்ஷேத்திரங்களிலும் அக்கிரஹாரங்களைக் கட்டினன். விஷ்ணுவின் திவ்யஸ்தானங்கள் அனேகங்களையும் உத்தாரணஞ்செய்தான். ஆசார்யஹரதத்தர் கூறியுள்ள முறைப்படி மலைகளின்மீதுள்ள பல சுப்பிரமணியாலயங்களையும், விநாயகரினலயங்களையும் நிர்மாணஞ்செய்தான். பல குளங்களும் தடாகங்களும் வாய்க்கால்களும் புதிதாய் உண்டுபண்ணினன்.

(தொடரும்)

N. வைத்தியநாதசாஸ்திரி,

ஸரஸ்வதிமஹால், தஞ்சை.

# விவாஹவயது மசோதா.

இது விஷயமாய் ஆதரணைக் கூட்டங்களும், கண்டனக்கூட்டங்களும், பலவிடங்களில் நடைபெறுகின்றனவென்று பத்திரிகைகளைப் படிக்கப் பிரியமுள்ளவர்கள் தெரிந்துகொண்டேயிருக்கிறார்கள். கண்டனக்கூட்டம் போடுகின்றவர் பெரும்பாலும் வைதிக கோஷ்டியினரெனப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் பிரமாணங்களுக்குக் கட்டுப்பட்டும், அதை மீறிப்பேசினால் பாபம் பிடித்துக்கொள்ளுமென்று பயப்பட்டும், பரலோகமொன்றுண்டு. அங்குள்ள பேரின்பத்தைப் பெற இங்கு செய்யப்படும் தர்மமே காரணமென்றும், தர்மமார்க்கத்தை அதிக்கிரமித்தால் நரகமே கெதியென்றும் நன்றாக ஞாபகப்படுத்திக்கொண்டும் பேசுகின்றார்கள். ஆதரணைக் கூட்டத்தார்களோ பலவாறாகக் காணப்படுகின்றார்கள். அவர்களுள் சிலர் சுருதிஸ்மிருதி முதலியவைகளெல்லாம் கட்டுறைகளேயன்றி உலக நன்மைக்காக உள்ளதல்ல. அதனால் அதில் விவாஹவயதைப் பற்றி எப்படி கூறப்படுகின்றதென்று நாம் கெவனிக்க வேண்டியதில்லை. உலக நன்மைக்காக ஸ்வேச்சையாக நமக்குத் தோன்றிபடி செய்யவேண்டும். உலகத்தைக்கெடுப்பது பாலிகா விவாஹம் போல் வேறொன்றுமில்லை, இது பெரிய க்ஷேமகாமென்று வைதிகர் ஓர் புறத்தில் கூச்சலிட்டாலும், அதைக் காதுக்கு வாங்காமல் காரியத்தை முடிக்க தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்கிறார்கள். வேறு சிலர் சாஸ்திரத்தை அப்படி அடியோடு தள்ளிவிடமுடியாது. ஆனால் அது பாலிகாவிவாஹத்தை ஆதரிப்பதாயிருக்குமாயின் காலத்திற்கேற்றபடி சில சாஸ்திர விதிகளை மீறி விடத்துணிந்தது போல் இந்த பாலிகாவிவாஹவிதியை மீறிநடக்கத் துணியவேண்டியதுதான். அது சாஸ்திரகாலத்தில் சரியாகத் தோன்றியிருப்பினும் தற்காலத்தில் பல தீங்குகளை விளைவிக்கின்றமையால் அதை கண்டிப்பாய்க் கண்டிக்க வேண்டியதுதான் என்று கூறுகின்றனர். இதில் சாஸ்திரகாலமென்று வியவஹரிக்கின்றனர். அதற்கென்ன விலக்கணமோ தெரியவில்லை. சாஸ்திரமென்று வழங்கப்படும் காலம் அத்தன்மைத்து எனின், இக்காலத்தில் அச்சாஸ்

திரம் வழங்கப்பட்டு வருவதால் இதுவும் சாஸ்திரகாலமாதல்பற்றி இப்பொழுதும் பாலிகா விவாஹம் நன்மையை விளைவிப்பதாகவே ஆகும். சாஸ்திரம் பிறந்தகாலம் சாஸ்திரகாலமெனின் பிறப்பிறப்பில்லாத சாஸ்திரமொன்று அநாதியாக வருவதுபற்றி அப்படியும் சொல்லவொண்ணாது. இதனால் சாஸ்திரத்தையே பிரமாணமாகக் கொள்ளக் கூடாதெனக் கூறுபவர் சிறுவர்களை எமாற்றுவதற்காகச் சொல்வதேயன்றி வேறில்லை. மற்றும் சிலர் சாஸ்திரம் பிரமாணந்தான். அது பாலிகா விவாஹத்தையே போதிக்கவில்லை. ப்ரௌடாவிவாஹத்தையேபோதிக்கின்றதென ஓர் சாஸ்திரிகளும் அழகாய்ப் புஸ்தகம் போட்டிருக்கின்றார் என்று கூறுகின்றார். அதைக் கண்டித்து வேறொருவர் போட்ட புஸ்தகத்தை இவர் பார்க்கவில்லைபோலும். அதுவும் இதற்குமேல் அழகாகத்தான் இருக்கிறது. இம்மட்டோடல்ல 1886ஞு ஜூலை 30உ வெளிவந்த பிரம்மவித்யா பத்திரிகையும் இதைப்பற்றிப்பேசியிருக்கிறது. அதாவது பிராமணர்களின் பெண்களுக்கு விவாகம்செய்ய காலம் எதுவரையிலுள்ளதென ஸ்மிருதிகளின்கொள்கை? இக்கேள்விக்கு உத்தரம் கூறுவாம். "மனு, மங்கையர்களுக்கு உபநயநத்துக்குப்பதில் விவாகம் செய்யவேண்டுமெனக் கூறினர்" என்று வியாக்ரபாதஸ்மிருதி கூறுதலால் புருஷர்களுக்கு உபநயநம் எவ்வாறோ, அவ்வாறே ஸ்திரீகளுக்கு விவாகம் எனத் துணியப்படுகிறது. அன்றேல் மனுமுதலிய ஸ்மிருதிகர்த்தர்கள் விவாககாலம் வெவ்வேறு கூறியது யாதுகாரணம்? அவை உண்மையாயின் உபநயநகாலமே விவாஹகாலமென நிச்சயிப்பது எங்ஙனமொவ்வுமெனில் அவ்வசனங்களைக்காட்டி அவைகட்கு வழி கூறுவாம். அவற்றுள் போதாயனர் சொல்லுவது 'நற்குணமுள்ள பிரம்மசாரிக்கு நக்னிகையைக்கொடுத்தல்வேண்டும். அக்குணமுள்ளவர் கிடைக்காமற்போயினும் அப்பெண் ரஜஸ்வலையாவதற்குமுன் குணமில்லாதவனிடமும் கொடுக்கலாம்.' அங்ஙனமே வஸிஷ்டரும்கூறுகின்றனர். 'ருதுவாவதற்குமுன்னே பெண்ணை தானம்செய்யவேண்டும். ருதுவான பெண்ணை வீட்டில் வைத்துக்கொண்டால் தகப்பன் பாவியாவான்.' ஸம்வர்த்தர் சொல்லுவது—'வெட்கமில்லாது விளையாடுவது, பசுக்களுடனே திரிப்பது என்னுமிக்குணங்களுள்ள இளமைப்

பருவத்தில் விவாகம் செயல்வேண்டும். எட்டாவதுவயது வந்தால் அவள் கௌரியெனவும், ஒன்பதாவதுவயதில் ரோஹிணியெனவும், பத்தாவது வயதுவந்தால் கன்னியெனவும், அதன்பிறகு ரஜஸ்வலையெனவும் கூறி, வயது பன்னிரண்டு சென்ற பிறகும் பெண்ணை விவாஹம்செய்துகொடுக்காததகப்பன் தான்சோணிதபானம்மாஸம் ஒருமுறை செய்பவனுக்கொப்பாவான்என்றும்,கௌரிதானம்செய்தால் ஸ்வர்க்கமெனவும், ரோஹிணிதானம் செய்தால் வைகுண்டமேகுவானெனவும், கன்னியைக் கொடுத்தவன் பிரும்மலோகம் அடைந்தவனெனவும், ரஜஸ்வலையைத்தானம் செய்தால் ரௌரவ நரகம் புகுவானெனவும் அதுகொண்டு ருதுகாலத்துக்குமுன்னமே பெண்களுக்கு விவாகம் செயல்வேண்டும். எட்டாவதுவயது, கன்னிகளின் விவாகத்திற்குச்சிறந்ததெனவும் கூறினர்." யமனே— இவ்வாறே வேற்றுமைகளை பலவாறுரைத்துப் பிறகு— ஆதல் கொண்டு மாதர் புஷ்பவதியாவதற்கு முன்னே விவாகம் செய்ய வேண்டுமெனமொழிந்தார்.' ஆபஸ்தம்பரும், "எட்டு வயதில் கௌரி, ஒன்பதில் ரோஹிணீ, பத்தில் கன்னி, பிறகுராஜஸ்வலை என்றும் பன்னிரண்டில் விவாஹம் செய்வது அரசருக்குரியதென்றும் சொல்லுகிறார்.'' அங்ஙனம் மனுவும் "முப்பது வயதுள்ள ஒருவன் பன்னிரண்டு வயதுள்ள பெண்ணை விவாஹம் செய்ய வேண்டும் என விதிக்கிறார்.'' இவ்வாறு வசனங்களையாராயின் விவாஹகாலம் ருதுவாவதற்கு முந்தியகாலமே எனத்துணியப் பட்டது. அவற்றுள் முக்கியகாலம் எட்டாவது வயது முதல் பத்தாவது வயதுவரையில் உபநயனகாலம், ஸ்திரீகளுக்கு விவாஹ காலம் என்றும் வியாக்கிரபாதர் வசனத்தாலும், விவாஹம் ஸ்திரீகளுக்கு உபனயனம் என்று பிதாமகன் கட்டளையாதலாலும் கர்ப்பத்தைக் கூட்டி எட்டு அதாவது எழாவது வயது அல்லது எட்டாவது வயது கல்யாணம் செய்ய முக்கியம் என்னும் யமன் வசனத்தினாலும் அதுவே ஸித்தாந்தமாகிறது. அப்பால் பன்னிரண்டு வயது வரையிலும் காலமுள்ளது. அது அமுக்கியம். (முப்பது வயதுள்ள புருஷன் பன்னிரண்டுவயது உள்ள பெண்ணை மணம் புரிய) மனுவசனம் காணப்படுதலால் பிறகு எவ்விதமும் கூடா

தெனக் கருத்து. இங்ஙனம் கூறிய முக்கிய காலத்துக்கு முன் பெண்களைக் கல்யாணம் செய்ய விதிக்கும் விதிகள் நற்குணங்கள் நிறைந்த ஒருவன் கிடைத்தால் “ காலத்திற்கு முன்னும் கொடுக்கலாம் ” என்று யமன் வசனமிருக்தல்பற்றி ஏதோ ஒரு ஸமயம் நற்குணங்களுள்ளவன் கிடைக்குமிடத்து ஒவ்வும் என்று பிரம்மவித்யை கூறியிருக்கின்றது. இதில்எந்தவசனப்பிரௌடா விவாஹத்தைக்குறிக்கின்றதோதெரியவில்லை. மஹாமஹோபாத்தியாயவேதாந்தகேஸரி கணபதிசாஸ்திரிகளவர்களியற்றிய வயோநிர்ணய கிரந்தத்தில் பிரௌடாவிவாஹம் பலவாறாகக் கண்டிக்கப்பட்டு பாலிகா விவாஹமே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதில் பார்க்குமிடத்து பிரௌடா விவாஹத்தை ஒரு வசனமாவது ஆதரிப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருக்கையில் பிரௌடா விவாஹம் சாஸ்திரத்திற்கு ஒத்ததாயிருக்கிறதென்று ஸாதிப்பவர் எக்காரணம்பற்றி கூறுகிறாரோ தெரியவில்லை. சாஸ்திரத்திற்குக் கட்டுப்படாமல் பேசுகிறவர்களுள் சிலர் பிராமணர்களாகவும் காணப்படுகிறார்கள். மற்றும் சிலர் மற்றவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் ஜாதிப் பெண்களைப்பற்றி மசோதா சட்டமாகவேண்டுமென்று கூறுவார்களாகில் அதை யாருமாக்ஷேபிக்கவில்லை. இயற்கையாகப் பிரௌடா விவாஹமே அவர்கள் வகுப்பில் நடந்துவருகிறது. ஆகவே சட்டம் அனாவசியம். பிராமணப் பெண்களுக்காகக் கூறுவார்களானால் இப்படி சிபார்சு செய்யும்படி இவர்களை எவர் கேட்டுக்கொண்டார். பிராமணத்வேஷம் செய்யுமிவர் அவர்களது க்ஷேமத்திற்காகவா இந்தக் காரியத்தில் தலையிடுகிறார்கள்? பிராமணர்களுக்கு தர்மஸம்சயம் நேர்ந்தால் அதை நீக்கி நிச்சயத்தை உபதேசிக்க ஆசாரியாள் பரம்பரையாக வந்துகொண்டிருக்கிறார்கள். குருசிஷ்யபாவ ஸம்பந்தமுள்ள இவர்களுக்கு இதில் அதிகாரமில்லையாம். வழியோடுபோகும் யாரோ ஒருவர் சொல்வதைக் கேழ்க்கவேணுமாம். இதென்ன அநீதி ! இப்படி வைதிகர் சொல்வது அசட்டுத்தனமாகவும் முரட்டுத்தனமாகவும் பிடிவாதமாகவுமிருக்கிறதாம். சாஸ்திரத்தை மீறியும், ஆசாரியாளை அலக்ஷியம் செய்தும் சொல்வது அசட்டுத்தனமில்லையாம், முரட்டுத்தனமில்லையாம், பிடிவாதமில்லையாம். இதென்ன பிராந்தியோ தெரியவில்லை. பரமேசுவரன்தான் நல்லபுத்தி புகட்டவேண்டும்.

பத்திராதிபர்.